[1986 நவம்பர் 24

அரூர் வட்டம் தீர்த்தமலை கோயில் திருப்பணி.

161—(*வினா எண். 9059) திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம் புராதனமான தீர்த்தமலை கோயில் திருப்பணி மேற்கொள்வது பற்றி அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், தீர்த்தமலை அருள்மிகு தீர்த்த கிரிஸ்வரர் திருக்கோயிலில் திருப்பணி மேற்கொள்வதற்காக ஏற்கனவே நியமிக்கப்பட்ட திருப்பணிக்குழுக்கள் திருப்பணி வேலைகளில் தீவிர நடவடிக்கை எடுக்காததனால், புதிய திருப்பணிக் குழு ஒன்று அமைத்தல் தொடர்பாக நிர்வாக அறங்காவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அறங்காவலரிடமிருந்து அறிக்கை பெற்றதும், புதிய திருப் பணிக்குழுவை அங்கீகரிப்பதற்கும், திருப்பணி வேலைகளை துவங்குவதற்கும் உரிய மேல் நடவடிக்கைகள் எடுக்கப் படும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் வட்டம், தீர்த்தமலை அருள்மிகு தீர்த்த கிரிஸ்வரர் திருக்கோயிலுக்கு முன்பிருந்த அறநிலையத்துறை அமைச்சர் அண்ணன் திரு. ஆர்.எம்.வீ. அவர்கள் கூட வந் திருந்தார்கள். அந்தக் கோயிலுக்கு பாதை அமைக்கப்பட வேண்டும் என்பதை அவர்கள் நேரடியாகப் பார்த்து வந் தார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன் னது போல திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு அது சரியானபடி செயல்படவில்லை என்று சொன்னார்கள். திருப்பணிக் குழு விற்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை. அறநிலையத் துறையின் அறங்காவலர்கள் சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்னால் பத்தாயிரம் ரூபாய் திருப்பணிக்காக வசூல் செய்து அப் படியே செலவழிக்கப்படாமல் பாங்கில் இருக்கிறது. ஆகவே சரியான உத்தரவு போட்டு போடப்படக் கூடிய திருப்பணிக் குழுவிற்கு அந்தப் பணத்தை எடுத்து செலவழிக்க உரிமை உண்டு என்று போட்டால்தான், அந்தப் புதிய திருப்பணிக் குழுவினால், நல்லமுறையில் திருப்பணிகளைச் செய்ய முடியும். ஆகவே அந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா? போடப் பட வேண்டிய திருப்பணிக்குழுவை சீக்கிரத்தில் போட நட வடிக்கை எடுக்கப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

1986 நவம்பர் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அவையில் தயவுசெய்து அமைதி காக்க வேண்டும்.

(முற்பகல் 9—50)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே திருப்பணிக் குழுவை நியமனம் செய்வதற்கும் திருப்பணிகளை துவங்குவதற்கும் இந்தத் துறை நடவடிக்கை எடுக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புராதனமான தீர்த்தமலை கோவில் போன்று தமிழ் நாட்டில் பல கோவில்கள் இருக்கின்றன. அந்தக் கோவில்களுக்கு போதிய வருமானம் இல்லாத காரணத்தால் திருப்பணி செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, திருக்கோவில்களுக்கு திருப்பணி செய்வதற்கென்று தனியாக ஒரு லாட்டிரி சீட்டு ஆரம்பித்து, அதன்மூலம் வரும் வருமானத்தை வைத்து திருப்பணிகளைச் செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே' அது பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் வினாவைப் போட வேண்டும்.

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பணிகளுக்கு என்று கோவில்களைத் தேர்ந்தெடுப்பதில் தமிழக அரசு ஏதாவது வரன்முறை வைத்திருக்கிறதா? ஆம் எனில் எந்த அடிப்படையில் என்ற தகவல்களைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக வினாவைப் போடும்படி மாண்புமிகு பேரவைத் தலைவரின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்களில் திருப்பணி செய்வதற்கு அரசு கடைப்பிடிக்கின்ற நடைமுறைகள் என்ன? இன்றைக்கு பல்வேறு திருக்கோவில்கள் தேவஸ்தான பொறுப்பில் இருக்கின்றன. அந்த தேவஸ்தானங்கள் அந்தக் கோவில்களைச் சரியாக பராமரிக்காமல் இருக்கின்றன. திருப்பணிகளும் செய்வதில்லை. அப்படிப்பட்ட கோவில்களுக்கு அரசே பொறுப்பு எடுத்து, திருப்பணிகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கேள்வி ஒரு மாவட்டத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட கோவிலைப் பற்றியது. பொதுவாக திருப்பணி செய்ய வேண்டிய அவசியம் உள்ள கோவில்களைப் பற்றியெல்லாம் கேட்டால் என்னிடம் விவரம் இல்லை. ஆகவே தனி வினா போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டத்தில் இருக்கிற இந்த தீர்த்தமலை கோயிலின் தீர்த்தம் உண்மையிலேயே சர்வரோகத்தைப் போக்கக் கூடிய ஒன்றாகும். வரலாறு ரீதியாக மட்டும் அல்லாது விஞ்ஞான ரீதியாகவும் அது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல தீப்பத்துறை என்ற கிராமத்திலே இருக்கிற ஒரு பாறை மீது எண்ணெய் விட்டால், அது கசப்பாகி பாம்பு கடிக்கு மிகச் சிறந்த வைத்தியமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட அத்தியாவசியமான ஊர்களை நல்ல முறையில் விளம்பரப்படுத்தி, அங்கே எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து, யாத்ரீகர்கள் வர, போக்குவரத்து வசதிகள், ஒட்டல்கள், தங்கும் விடுதிகள் போன்ற அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து பொது மக்களுக்கு உதவிகரமாக ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பணிக் குழு மூலமும், அறங்காவல் துறை மூலமும் விளம்பரங்கள் செய்யலாம்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவையின் தலைநாயகர் அவர்களே, புராதனமான திருக்கோயில்களை எல்லாம் திருப்பணி செய்ய வேண்டும் என்று அரசு முன் வந்திருக்கிறதா? இது வரையில் எத்தனை கோவில்களுக்கு திருப்பணி செய்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக வினாவைப் போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

போளூர் தொகுதி அமிர்தி சுற்றுலா மிருகக் காட்சி சாலை.

162—(*வினா எண். 9581) திரு. ஜெ. ராஜாபாபு : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியிலுள்ள அமிர்தி காட்டிலுள்ள சுற்றுலா மிருகக் காட்சி சாலையை அபிவிருத்தி செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : **ஆண்டு தோறும் இயற்கைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப் படும் நிதியைக் கொண்டு அமிர்தி மிருகக் காட்சிச் சாலை**